1st April 1965]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : மேலும் புலனாய்வு நடத்துவதற்காக இது இப்போது போலீசாரிடம் முடிவுறு நிலையில் உள்ளது.

Jaggery manufacturing co-operative societies

* 413 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of jaggery manufacturing co-operative societies established so far in the State and the number of tappers employed therein?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : (1) இதுவரை நம் மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள பனைவெல்ல உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1,482.

(2) இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளரின் எண்ணிக்கை 1,90,441 ஆகும்.

திரு. கோ. சி. மணி : மது விலக்குச் சட்டத்தின் காரணமாக வேலையை இழந்தவர்களில் எத்தனைபேர் இதன் மூலம் வேலை வாய்ப்புப் பெற்று இருக்கிறார்கள்?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : நான் சொன்ன மொத்த எண்ணிக்கையில் அவர்களும் சேர்ந்திருக்கிறார்கள்.

Chettipatti Labour Contract Co-operative Society, Dharmapuri

* 414 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) the date of formation of the Chettipatti Labour Contract Co-operative Society in Dharmapuri division;

(b) the nature of financial assistance so far extended; and

(c) its present financial position?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) செட்டிப்பட்டி, "ஆர். லி. ஹரிஜன கூட்டுறவு தொழிலாளர் ஒப்பந்தச் சங்கம் லிமிடெட்", 1-9-1960-ல் பதிவு செய்யப்பட்டு, 5-9-1960-லிருந்து தன்பணியை ஆற்றத் தொடங்கியது.

(இ) இதன் தொழில் மூலதனத்திற்காக அரசாங்கம் ரூ. 50,000 வட்டியில்லாக் கடனுக வழங்க அனுமதித்துள்ளது. இதில் ரூ. 45,000 சங்கத்திற்கு வழங்கப்பட்டுவிட்டது. இந்தக் கடன் வாங்கியதிலிருந்து ஆறாவது ஆண்டு முதல் 20 சம ஆண்டுத் தவணைகளில் இக்கடன் திருப்பிச் செலுத்தப்படும்.

(உ) 30-6-1964 வரை இச்சங்கம் ரூ. 16,056.18 நஷ்டத்தில் பணியாற்றிவந்தது.

நொய்யல் ஆற்றின் உற்பத்தி இடத்தில் அணை

*** 415 கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவையில் நொய்யல் நதி உற்பத்தியாகும் பகுதியில் அணை கட்டும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா?